குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்
எஸ்.டி.சி. எண்.1392/2022
வழக்கு சாட்சி எ.மா.சா.2

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 06–ம் நாள் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலமுருகன் | தொழில் | |
| த/பெ(அ) க/பெ. | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | | |

(எதிரி ஆஜர்)

நாள் 06.02.2026

முதல் விசாரணை

இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததின் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சரிதான். நான் தற்போது சங்ககிரி கிளை HDFC வங்கியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பானையில் குறிப்பிட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் தற்போது கொண்டுவந்துள்ளேன். ஜெயபிரகாஷ் என்பவருடைய Account opening form Account No.50200015579396 என்ற கணக்கிற்கு 03.11.2015 முதல் 31.01.2026 வரை உள்ள வங்கி பரிவர்த்தனை மற்றும் காசோலை எண்.0000023 என்ற காசோலை திருப்பப்பட்டதற்கான status கொண்டுவந்துள்ளேன். காசோலை எண்.0000023 என்ன காரணத்திற்காக ரிட்டன் செய்யப்பட்டது என்றால் எங்களுடைய வங்கி ஆவணங்களின் படி மேற்படி காசோலை இன்னும் unpaid status என்று தான் உள்ளது. இன்னும் காசோலை Collection க்கு வரவில்லை. அந்த வங்கி கணக்கானது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறதா என்றால் கடந்த 2 ஆண்டு காலமாக Negative balance ல் இருந்து வருகிறது. தற்போது நடைமுறையில் தான் உள்ளது. எங்களது வங்கியை பொருத்தவரை தற்போது வரை Collection ஆகாமல் இருந்து வருகிறதா என்றால் பொதுவாக எங்களது வங்கியில் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்தால் அந்த காசோலை போதிய பணமில்லை

காசோலையில் உள்ள கையெழுத்து வேறுபாடு உள்ளது அல்லது வங்கி நடைமுறையில் இல்லை என்று திருப்பப்படும். ஆனால் இந்த காசோலையானது எந்த வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்தனரோ அந்த வங்கியில் கணக்கு எண் தவறாக குறிப்பிட்டுருந்தாலோ காசோலை வசூல் ஆகாமல் இருந்திருக்கலாம். அந்த விவரம் அந்த வங்கியில் தான் கேட்கவேண்டும். எங்களது வங்கியை பொருத்தவரை மேற்படி காசோலை எண் தற்போது வரை Unpaid ஆகத்தான் உள்ளது. **Account opening form EX.D.2, Bank statement EX.D.3, Cheque Status EX.D.4.**

**<u>குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக ஒரு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தால் தான் திருப்புதல் குறிப்பானை வழங்கப்படும் என்றால் சரிதான். மா.சா.ஆ.1 வழக்கு காசோலை எங்கள் வங்கியால் ஜெயபிரகாஷ்க்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். 16.07.2022 ம் தேதி ஜெயபிரகாஷ்ன் வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் இருப்பு ஏதும் இல்லை.

<u>மறுவிசாரணை</u> – இல்லை